# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சுரு]　யாழ்ப்பாணம்:- கர வருடம் தை மீ கக உ வெள்ளிக்கிழமை (1 பிப்ரவரி 1952)　[இல - அக]


# கலியுக வரதா வருக! கருணைக் குமரா வருக!

## மொழிக் கெட்டா அழக, முதல்வ, முருக வருக!

அதோ, ஓர் பச்சிளங் குழந்தை; அழகே வடிவாய் அமைந்தது வயது இன்னும் மூன்று நிரம்பப்பெற்றதாகத் தோன்றவில்லை. திருச்செந்தூர்க் கடலை நோக்கி ஓடி வருகிறான். காலைக்கதிரவன் வெளிக்கிளம்பி சிறிது நேரமே ஆயிற்று. அவனது செவ்விய கிரணங்கள் அச்சிறுவனை மகிழ்ச்சியுடன் வரவேற்பது போன்றிருக்கின்றது.

இக்குழந்தை யார்? புன்னகைதவழும் திருமுகம். அருளைப் பொழியும் இரு அகலக் கண்கள். பவளம் போன்ற செவ்வாய். பச்சை அரிசி போன்ற அழகிய பல்வரிசைகள். கரிய புருவம். வசீகரப் பார்வை. இவையனைத்தும் அக் குழவியைக் காண்போர் கருத்தைக் கொள்ளை கொள்வதாக இருக்கின்றன. இயற்கை யழகை மேலும் அழகுபடுத்த அரையில் அழகிய சதங்கைகள்; கால்களில கணீர் கணீர் என ஒலிக்கும் பாதசரம்; காதுகளில் உயரியகாதணிகள்; சிறு விரல்களில் சிறந்த சில மோதிரங்கள். கைகளில், கனகக் காப்பு; இன்னும் இவைபோன்ற அணிகலன் பல அணிந்திருக்கிறான். பெரு விரலைத் தனது பவள வாயில் வைத்துச் சுவைத்துக் கொண்டு கடலை நோக்கி நிற்கும் அச் சிறந்த காட்சி கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவருவதாக இருக்கின்றது.

சிறிது நேரத்தின் பின்னர் ஒரு அழகிய பெண்மணியின் இனிய குரல் அவனை அழைக்கின்றது. அம் மாதரசியும் அதோ அக் குமரன் நிற்கும் இடம் நோக்கி வந்துகொண்டிருக்கின்றாள். நீலநிற மேனி. கருணை வழியும் திருவிழிகளையுடைய அவ் வம்மையார், அன்பு கசிந்துருக அக்குழந்தையை அழைக்கின்றாள்.

குழந்தாய்! வா! என் கண்மணியே வா! நான் அழைத்தவுடன் என்னருகே நீ ஓடிவராவிட்டால், இனிமேல் உன் அரையில் அரைஞாண் பூட்டமாட்டேன். அழகிய மகர குண்டலங்களை உன் காதுகளில் அணிய முற்படேன். உன் முகத்திற்கு ஏற்ற பொட்டிட்டு உன்னை அலங்கரிக்கப் போவதில்லை. கமலம்போன்ற உன் கண்களுக்கு மைபெழுத இனி நான் முன்வரேன். செவ்விய தாமரைப்பூப்போன்ற உன் அடிகளில் இனிச் சிலம்பை அணியவும் மாட்டேன். கார்ந்து நிரம்பி இருக்கும் பாலையும் உனக்கு ஊட்டப்போவதில்லை அதுமட்டுமா? இனி உன் முகம் பார்த்து ஓர் இன்னுரைகூடப் பகர எனக்கு விருப்பம் வராது. ஆதலால் சிறிதும் தாமதியாது ஓடி வந்து விடு. சைவசமயம் தோன்றுதற்கு முதல்வனாக இருப்பவனே! வா. அலைகளை எற்றித் திமிறுகின்ற கடற்கரை சேர்ந்து நிற்கின்ற மழலைச் சொற் சிறுவா வருக. உனக்கென வளர்ந்து வரும் வள்ளி நாயகியின் மணாளனாகப் போகும் குழந்தாய் வா".

இவ்வாறு கூறிக்கொண்டு கையிலிருக்கும் பொற் கிண்ணத்திற சாதம் பிசைந்து வைத்துக்கொண்டு அவ்வம்மையார் குழந்தைப் பக்கம் வருகின்றாள். இவ் வம்மை தான் உலக மாதாவாகிய பார்வதிதேவி. குழந்தை கலியுக வரதனான குமாரக் கடவுள்.

இக் கருத்தினைப் பகழிக் கூத்தன் எனும் புலவர் எவ்வளவு அழகாக அடியில் வரும் பாடல்களில் அமைத்துள்ளார் என்பதைப் படித்துப் படித்து இன்புறுவோம்.

"இறகு மரைஞாண்
　இனிப்பூட்டேன்;
இலங்கு மகர குண்டலத்தை
எடுத்துக் குழையின்
　மீதணியேன்;
இனியுன் முகத்துக்
　கேற்றவொரு
சிறுகுத் திலகம்
　தனைத் திட்டேன்;
திருக்கண் மலர்க்கு
　மையெழுதேன்;
செம்பொற கமலச்
　சீரடிக்குச்
சிலம்பு திருத்தேன்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

### தென் ஆபிரிக்கா திரு. ச. மு பிள்ளை அவர்கள் வரைவது

திருத்தொண்டர் திருநாள்

# திருவேடம் சிவனுரு எனத் தெளிந்த சீலர்

## சிவநிந்தை சிறிதுஞ் சகிக்கலாற்ரு அடியார்

## காதல் மனையார் கரந்தறித்த கலிக்கம்பர்

### [ இன்று கலிக்கம்பநாயனார் குருபூசை ]

நாயனார் திருப்பெண்ணாகடத்தில் வைசியர்குலத் தவதரித்துத் திருத்தூங்கானை மாடத்தி லெழுந்தருளி யிருக்குஞ் சிவபெருமானுக்குத் திருத்தொண்டு செய்து வந்தார். சிவபெருமானை வழிபடினும் சிவனடியாரை வழிபடாரவின் தம்வழிபாடுபயனிலதாகுமென் பதை நினைத்துச் சிவனடியாரைத் திருவமுது செய்வித்துத் திரவியங்களுங் கொடுக்கும் வழக்கமுடையராயிருந்தார்.

இவ்வாறு நிகழுங் காலத்தி லொருநாள் அடியாரை அழைத்துத் திருவமுது செய்விக்கும் பொருட்டு மனைவியார் கரநீர் வார்க்கத் தாம் அவர்கள் திருவடிகளை விளக்கினர். அவர்களு ளொருவர் முன்னர் தம்மிடத்துப் பணிவிடைக்காரர்களாயிருந்தவ ரென்று

ஆன அன்பர் தாமென்று
　மாறனார் அன்பர்க்
　　கமுது செய
மேன்மை விளங்கு போனக
　முய்விரும்பு கறிசெய்
　　தயிர் நெய்பால
தேனி னினிய கனிகட்டி
　திருந்த அமுது
　　செய்வித்தே
வேனை நிதியம் வேண்டுவன
　எல்லா மின்ப
　　முற அளிப்பார்.

நினைத்ததாற் கரகநீர் வார்க்கத் தாழ்த்தார் இது சிவனடியார் நிந்தையாயிற்று. சிவனடியார் நிந்தை சிவநிந்தையே

"வெறித்த கொன்றை
　முடியார்தம் அடியா ரிவர்
　　முன் மேவுநிலை
குறித்து வெள்கி நீர்வாரா
　தொழிந்தா" ரென்று
　　மனங்கொண்டு
மறித்து நோக்கார் வடிவாளை
　வாங்கிக் கரகம்
　　வாங்கிக்கை
தறித்துக் கரக நீரெடுத்துத்
　தாமே அவர்தாள்
　　விளக்கினர்.

யாகும். ஆகவே நாயனார் மனைவியாருடைய அக் கையைத் தறித்துத் தாமே நீர் வார்த்துத் திருவடிகளை விளக்கித் திருவமுது செய்வித்தார்.

நாயனார் இத் திருத்தொண்டையே மேலுங் கடைப்பிடித்து வாழ்ந்துசிவபத மடைந்தார். ".... .... உயிர்க்குயிராய், அறிவுகொடுத்தருளாற் செறிதலினல் திருவேடம சிவனுருவேயாகும்" (சி. சி.) என்றதனுல், உயிர்க்குயிராய் எங்கும் வியாபித்து நின்று திருவருள் சுரக்கும சிவபரம் பொருள் அடியார் சிந்தையிற்றிகழ்ந்து அருளொளி பரப்புவதால அடியார் திருவேடம் சிவபரம் பொருளின் திருவுருவமேயாகின்றது. இவ்வாறு காணும் பான்மையரே அத்துவித பேரின்ப முத்திக்கு அடிகோலுகின்றவராவர்.

உ

## "ஞானத் திரளாய் நின்ற பெருமான்"

திருச்சிற்றம்பலம்

ஞானத் திரளாய் நின்றபெருமான் நல்ல அடியார் மேல்
ஊனத் திரளை நீக்கும்அதுவும் உண்மைப் பொருள் போலும்
ஏனத் திரளோ டினமான்காடி இழியும் இரவின் கண்
ஆனைத் திரள்வந் தணையுஞ் சாரல் அண்ணா மலையாரே.

திருச்சிற்றம்பலம்

அரசியல் அலை

# சமதர்மக்கொடி! ஆனால் ஆட்சிமுறை அதர்மம்!

## காந்தி அடிகளின் சாந்த நெறியா? வலியவர்களின் பலவந்தமா?

## எது வேண்டும் இலங்கைக்கு?

சமதர்மத்தைப் போதித்துச் சாதித்தவர் யார்? காந்தி அடிகளா? லெனினா? ஸ்டாலினா? அல்லது அவர்கள் ஏவற் சகாக்களா?

சமதர்மத்தின் உயிர்நாடியாகிய அன்பு நெறியில் நின்றவர் யார்? காந்தி அடிகளா? பொதுவுடைமை வேதாந்தப் போலிஞானிகளா?

இந்த நூற்றுண்டில், சமதர்மத்தை வளர்த்த சத்தியாக்கிரகி யார்? சாதிமத பேதம் பாராமின்றி வாழ்க்கை வாழ்ந்தவர் யார்? அன்பு நெறிக்காக ஆருயிரை அர்ப்பணஞ் செய்தவர் யார்?

அந்த மகான் சிந்திய இரத்தத்தின்றேய்ந்த அனனார் காட்டிய அற நெறியைப் பின்பற்றும் ... இந்திய தேசத்தில் ... பின்னுக்கு இந்திய தேசத்தில முட்டுக்கட்டை போடும் முட டாட்களையா "சமதர்மிகள்" என்ற தெய்வ நாமங் கொடுத் தழைக்கின்றீர்கள்!

மனித வர்க்கத்தின் புனித உருவம் மறைந்து ஆண்டுகள் நான்கு ஆய்விட்டன. அந்த அரசியல் ஞானியின் பாதார விந்தத்திலிருந்து அறநெறி அறிந்த நேருவுடன் நேர்நற் போராடுபவர்களா சமதர்மிகள்?

மகாத்மா மண்ணுலகு நீத்த நாளை ஆண்டாண்டு தோறும் நினைந்துகைந்துருகும் ஈழத்திலும இந்திய நாட்டிலுமா சமதர்மம் என்ற பசப்போர்வையில் உலாவும் அதர்மப் புலிகள் தலைக்காட்டத் துணிவது?

கறுத்தின்னு செய்தவக்
　　[கண்ணும்
மறுத்தின்னு செய்யாமை
　　[மாசற்றுர் கோள்

என்பதுதான் உண்மைச் சமதர்மம்.

## நினைவுக் கூட்டம்

சைவத்திருவாளர் M.S. திருவிளங்கம் அவர்களின் மறைவுக்கு மனஸ்தாபம் தெரிவிக்கவும் அவர் செய்துவந்த சைவத்தொண்டினைத் தொடர்ந்து ஆற்றிவர வழிவகைகளை ஆலோசிக்கவும் 'கூட்டுவழிபாட்டை'ப் பாப்பத் 'திருவிளங்கம் நிதி' ஒன்றைத திரட்ட ஒழுங்கு செய்யவும்வெள்ளவத்தை, சைவ மங்கையர் வித்தியாலய மண்டபத்தில ஒரு கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (3-2-52) பிற்பகல் 3 - 30 மணிக்கு நடைபெறும். சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமை வகிப்பார்கள்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். கா ஞூல மாசி மூ
கக உ வெள்ளிக்கிழமை

## ஐக்கிய மத்திய சந்தை அகவிலையைக் குறைக்குமா?

இன்றியமையாது வேண்டப்படும் உணவுப் பொருட்களின் விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே வருகின்றதென்றும் அந்த நிலைமையை மாற்றி அமைக்க வேண்டும் என்றும் அரசாங்கத்தாரும் பொதுசனத் தொண்டர்களும் பெரிது முயன்று ஐக்கிய முறையில் விளைபொருட்களையோ வேறு பொருட்களையோ பொது இடத்தில் வரவழைத்துப்பின்னர் குடிசனங்களுக்கு நியாயமான இலாபம் வைத்து விற்கக்கூடிய ஒழுங்குகளைச் செய்வதற்காகக் கொழும்புமாநகரிற் சென்ற புதன் கிழமை ஒரு ஐக்கிய மத்திய சந்தையை நிறுவியிருக்கின்றனர்.

ஐக்கிய இயக்கத்தை அடிப்படையாகக்கொண்ட எந்த முயற்சியும் கொள்கையளவிற்போற்றற்குரியதே. நடை முறையில் ஐக்கிய இயக்கம் வளருவதற்கு நேர்மையும் நிதானமும் உள்ள குணசீலர்கள் காரியாதிகாரிகளாகவும் செயலாளர்களாகவும் பணியாளர்களாகவும் இருக்கவேண்டிய தவசியமென்பதை இதுவரை இந் நாட்டில் இவ் வியக்கத்தின் வரலாற்றை அவதானித்தவர்கள் ஏற்றுக்கொள்வர். அவ்வாறு நற்குணவான்கள் அமைந்துள்ள மத்திய சந்தை உண்மையில் அகவிலையைக் குறைக்க எவவிதம் அமைக்கப்பட வேண்டும் என்பதை ஆராய்வாம்.

இப்பொழுது சில நாட்களாகக் கொழும்பு மத்திய சந்தைக்குப் பொருள் வாங்குவதற்குப் புறப்பட்ட ஐக்கிய சங்க அலுவலாளர்கள் வேண்டிய பொருட்களைப் பெரும்பான்மையும் கிராமங்களிலுள்ள சந்தைகளிலேயே சென்று பெற்றனர். இதனால் அப்பொருள்களின் விலை சாதாரணமான காலங்களிலும் பார்க்கக் கூடுதலாகவே காணப்பட்டது. அன்றியும் உள்ளூரார் அப் பொருட்களுக்குக் கூடுதலாக விலை கொடுக்க வேண்டியும் வந்தது. எனவே கொழும்பு நகரவாசிகளுக்கு ஏற்படும் நன்மை ஏனைய பாகங்களிலுள்ள ஊரவர்களுக்குத் தீமையாய் முடிகின்றது.

### அம்மை நோய்

வடமராட்சிப் பகுதியில் அம்மை நோய் அடங்கிவிட்டதாயறிய வருகிறது.

நோக்கம் விளைவிக்கின்றவர்களும் விளைபொருளை உணவுக் குபயோகிக்கின்றவர்களும் ஆகிய இருதிறத்தாரும் போதிய வருவாயும் நியாயமான விலையும் பெறவோ கொடுக்கவோ தக்கதாக இவ்வியாபார நிலையங்களை நடத்துவதே. இடை மனிதன் என்ற இராக்கதன் இவ் விருபாலாரின் பொருளாதார இரத்தத்தைப் பிழிந்தெடுத்துவிடுவதைத் தடுக்க ஐக்கிய மத்திய சந்தை உதவக்கூடியதாயிருந்தாலும் இப் பொருட்களை ஊர்களோறும் கொள்வனவு செய்யும் பொழுது அவ்வூர்களிலே நடைபெறும் வழக்கமான விலைக்கு மேலாகப் பெறக் கூடாது. கிராமவாசிகளுட் பொருள் விளைவிப்போர் கூடுதலான பணம் கொடுப்பவர்களுக்குப் பொருள்கள் யாவற்றையும் விற்றுவிட்டால் அவ்வூரவர்கள் வாங்குதற்குப் பொருள்களில்லாமல் வரும். உளவெனின் மிதமிஞ்சிய விலை கொடுத்துப் பெற வேண்டிய நிலைமை ஏற்படும்.

ஆகவே இந்த இயக்கம் இலங்கையிலுள்ளாரனைவர்க்கும் பயன்படவேண்டுமேயானல் விலைக் கட்டுப்பாடு உடனேயே வைக்கப்படவேண்டும். அன்றியும் இவ்விலைக்கட்டுப்பாடு தக்கவாறு ஆராய்ந்து காலத்துக்குக் காலம் மாற்றியமைக்கப்படுதல்வேண்டும். அத்துடன் மத்தியசந்தைக்குப் பொருள் வாங்குவதற்கு ஒவ்வொரு ஊரிலும் ஐக்கிய சங்கம் நிறுவப்படல் வேண்டும். விலை விபரங்களையும் இவ்வியக்கத்தால் விளையும் நன்மைகளின்ன வென்பதையும் தெளிவாக அச்சிட்டுக் கிராமவாசிகளுக்குப் பரப்புதல் வேண்டும்.

அரசினரால் அரசாங்க உத்தியோகத்தவர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுக்காகிய உதவிப் பணத்தைக் குறைப்பதற்காகவோ அன்றிக் கொழும்புமாநகரிலுள்ளார் குறைந்த விலைக்குப் பொருள்களைக் கொள்வதற்காகவோ இந்த மத்தியசந்தை நிறுவப் பெற்றதென்ற பிழையான அபிப்பிராயம் எழவிடக்கூடாது. நன்னோக்கத்துடன் நிறுவப் பெற்ற இம் மத்தியசந்தை நீடுநின்று குடிசனங்களுக்குதவி புரியச் செய்வதற்கு இந்த நிர்வாகப் பொறுப்பை ஏற்றவர்கள் கண்ணுங் கருத்துமாயிருப்பதோடு அவர்களுடன் ஊரவர்கள் ஒத்துழைத்துப் போதிய ஆதரவுங் காட்டுதல் ஆவசியம். ஐக்கிய இயக்கத்தின முக்கிய என்க.

### தொடர்கதை

# இன்பத்தின் நிலை இதுதானு?

'இறை ஒளி'

8

சங்கார் தம்வீட்டிற்குவந்த குமாரன் ஆசிரியரை ஆசனத்திருத்திச் சேமம் விசாரித்ததின்பின் கலை சம்பந்தமான பல விஷயங்களிலும் கலந்துரையாடிக் கொண்டிருக்குஞ் சமயம், பொருத்தமான சந்தர்ப்பத்தில் நாடகக்கலையைப்பற்றி ஆசிரியர் பேச ஆரம்பித்து நாடகச் சுவையை நன்ருக உணர்வதற்குக் கல்லூரி மாணவிகள் ஒரு நாடகம் தாங்கதாங்களாகவே நடிக்க யோசிக்கிருர்களென்றும் அதற்கு வேண்டிய நடிகைகளுள் பங்கஜமும் ஒரு இடம் பெறுவதாயும் ஆனல் அதற்குச் சங்காரின் உத்தரவு வேண்டுமென்றும் ஆசிரியர் படிப்படியாகச் சொல்லிவருமபொழுது சுருசடகப் பேர்வழியான சங்கார் தமக்குத் தற்கால நாடகம் அதிலும் திரையிற் காட்டப் பெறும் நடிப்பு வெறுப்பைக் கொடுக்கிறதென்றும் குறிப்பாலுணர்த்திக் (நாடகத்தின்) கதையின் போக்கைப்பற்றி அறிய முயன்ருர். ஆசிரியரும் நிலைமையை அவதானித்துவிட்டு, நடிக்கப்போகும் கதை 'விதியின்வேகம்!' என்ற மகுட நாமத்தைக் கொண்டதென்றும் சைவநூற் றுணிபுகளை அடிப்படையாக உள்ளதென்றும் 'எல்லாம் இறைவன் செயல்' என்ற உண்மையை எடுத்துக்காட்டுவதென்றும் சொல்லி முடித்தார். ஒருவாறு சங்கார் மனம் ஒருப்பட்டு உத்தரவு கொடுத்ததுபோன்று முகமலர்ச்சி காட்டிவிட்டு ஆசிரியருக்குத் தாம்பூலம் எடுத்துவா என்று மகளை ஏவுதலும் பங்கஜம் வெற்றிலைத்தட்டங் கையில் ஏந்திய வண்ணம் வந்து முறைபாக வணக்கஞ் செய்து ஆசிரியருக்குதவும்பொழுது "எல்லாம ஒழுங்காய் விட்டது" நாளை தொடக்கம் நாடகம் பயின்று வரவேண்டியதுதான் என்று புன்னகை பூத்த முகத்தராய்ப் பங்கஜத்தைப் பார்த்துச் சொல்வார்: இருந்தும் தகப்பனரின் நேர்முகக்கட்டளை பெறவேண்டியது முறை என்று நினைத்த பங்கஜம் "அப்பா என்ன சொல்கிறீர்கள்" என்று தெம்பாடியது போன்று கேட்கச் "சங்காரும்சைவஉண்மையைக்காட்டும் கதையாகையால் அதில் நீயும் ஒரு பங்கெடுப்பது நலலதுதான்" என்று கூறினர். ஆசிரியர் நாழிகையாய் விட்டது என்று புறப்பட்டார். சங்கார் ஆசிரியருக்குத் தாகசாந்தி செய்ய மறந்தவர்போல் விடுத்தார். ஆனல் பங்கஜம் மனத்தில் அது செய்வது முறை என்று தோற்றியது. அதற்கிடையில் ஆசிரியர் சென்று விட்டார்.

ஏதோ மனத்தில் ஒரு புது மலர்ச்சி உண்டாயது போலப் பங்கஜம் உணர்ச்சி ததும்பினவள் போன்று உற்சாகத்தோடுங் காணப்பட்டாள். ஆனல் ஆசிரியரை முறைப்படி உபசரிக்கத் தந்தையார் தவறிவிட்டார் என்ற எண்ணம் [illegible] செய்தது.

### "விதியின் வேகம்"

குமாரன் ஆசிரியர் பிறகிப் பெரும் பயனடைந்தது போன்று போனந்தத்தராகி 'விதியின் வேகம்' என்ற நாடகமல்லத் தமது விதி மின்னல் வேகமாகப் பாயவேண்டும் என்ற எண்ணங்கொண்டவர் அன்றிரவே நாடக அமைப்பையும், அவரவர்களுக்குரிய பாகங்களையும் நடிகர்களின் அட்டவணையையும் தயாரித்து என்று கதிரவன் கருணை செய்வானென அதைத் துயில்கொண்டு அதிகாலையில் எழுந்து கல்லூரிக்குச் சென்று பங்கஜத்தின் வருகையை எதிர்பார்த்தவண்ணமாக இருந்தார். பங்கஜம் மற்றைபகாட்கள் போலல்லாது கல்லூரிக்குப் போகும்போது அன்றலர்ந்த உரோஜா மலரை அழகுக்கழகு செய்வாள்போன்று அழகபதியிலமைத்துச் சென்றனள், கல்லூரி முன்றலிற் குமாரன் ஆசிரியர் இமையா டிமை அனுராகப் பார்வையோடு நிற்பதைக்கண்ட பங்கஜம் இயல்பாகவே இசைந்தெழுந்த உணர்ச்சியின் செய்கையாற் புன்முறுவல்செய்து மண்டபத்துட்புகுந்தாள். காலதாமதமின்றிக் கல்லூரி ஆரம்பமாயது. நாடகம் நடிக்க விருப்பமுள்ளவர்களை ஆசிரியர் அழைத்தார். ஐந்து பிள்ளைகள் வந்தனர். அவர்களில் இருவர் பங்கஜமும் பகவதியும். பங்கஜம் தானகவே வந்துவிட்டாள் என்ற சந்தோஷத்தை நுகரவிடாது பகவதி அழையா விருந்தினளாக வந்துவிட்டாள் என்ற மனவெப்பம் பங்கஞ் செய்துவிட்டது.

சூழ்ச்சி செய்வேன் என்று சபதஞ் செய்துகொண்ட பகவதி நாடக நடிப்பிற் றன் ஒரு பங்கு கட்டாயமாக எடுத்துவிடவேண்டுமென்று தீர்மானித்தமையே அன்று அவள் அங்கு வரவேண்டிய காரணம்.

### "நாடகத்தால் நட்பு"

ஆசிரியர் நிலைமையைக்கணித்துவிட்டு ஒருவாறு மனத்தைத் தேற்றி நாடகம் இன்னதென்பதையும் அதற்குப்பிரதானமாக நான்கு பிள்ளைகள் தேவை யென்றும் சிறு பங்கெடுக்கச் சிறுர்களில் ஐவர் வேண்டுமென்றுங் கூறிக் கதாநாயகியாகப் பங்கஜத்தையும் மற்றும் இடங்களுக்குப் பகவதியல்லாத மூன்று மாணவிகளையும் கதாநாயகனுகத்தன்னையுமமைப்பதாகச் சொல்லிவிட்டுச் சிறு பிள்ளைகளை மற்றைய வகுப்புக்களிலிருந்து வரும்படி கட்டளையிட்டார். இதற்கிடையிற் பகவதி தானும் பங்கஜமும் ஒன்ருக நடிக்க வேண்டும் என்று பங்கஜத்திற்கு வஞ்சக நெஞ்சினளாய்த் தெரிவிக்கக், கபடமில்லாள் பங்கஜம் தானகவே ஆசிரியருக்குப் பகவதியைத் தோழிப் பெண்ணுக அமைத்தல் நன்று என்று தணிந்து கூறினள். ஆசிரியர் பங்கஜத்தின் வேண்டுகோளை மறுத்தால் தன் உள்ளத்தமர்ந்தவள் தன்னில் வெறுப்புக் கொள்ளக்கூடும் என்ற அச்சம் ஒருபுறம், கேளவிக்கிசைந்தாற் பகவதி தனது மன நிலையை அறிந்துவிடுவாள் என்ற பயம் மறுபுறமாக ஒன்ருேடொன்று மோதுவதாற றன்பப்பட்டுப் பற்றிலிசைந்தார்.பகவதியின் கனவில் ஒரு அங்கம் கனவாய் விட்டது. பங்கஜமும் பகவதியும அளவளாவி அன்புகொள்ள ஆரம்பித்தனர். இதற்கிடையில்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## உண்மையின் உருவம்

தேசத் தியாகி

2.10-1869



30-1-1948

### மாபெருங் கூட்டத்தில் மகாத்மா நினைவு

யாழ்ப்பாண நகர சபைத் தலைவர் திரு. சாம் சபாபதி அவர்களின் அழைப்புக்கிணங்கி நகரசபை மண்டபத்தில் காந்தி பக்தர்கள் புதன்கிழமை மாலை 6 மணியளவில் மகாத்மாவுக்கு விசேஷ ஆராதனை செய்து உலகப் பெரியாரை நினைந்து போற்றினர்.

அத்தருணம் காந்திய சேவா சங்கத் தலைவர் திரு. H. S. பேரின்ப நாயகம் அவர்கள் சத்தியாக்கிரக தலைசிரேட்டரின் வாழ்க்கை, மனித வர்க்கத்தின் க்ஷேமசனத்திற்காகவே நடத்தப் பெற்ற தென்பதை விளக்கி காந்தியக் கொள்கை அத்தியாவசியம் இன்றைய உலகில் பெரிதும் வேண்டற்பாலதென்று ஒரு சொற்பொழிவாற்றினர். தேசியகீத பஜனையும் நிகழ்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன் கணிப்பது. எங்கள் சோதிடம்

இவ்வாரப் பலன்கள் 3—2—52——9—2—52

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

குடும்பவிஷயத்திற்சிறிது கஷ்டமானவாரம். வியாபாரத்துக்கு அல்லது உத்தியோகத்துக்கு நல்ல காலம். புதுமுயற்சிகளில் பணம்விட வேண்டிவரக்கூடும். வாரஇறுதியில் பகைவாழிவு நிச்சயம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

பிரயாணம் அல்லது பகிரங்கப்படுத்தலுடன் சம்பந்தமானஎந்த முயற்சியிலும் இந்தவாரம் நன்மை வரும். பெண்ணின நண்பராற் பெரும் உதவியுண்டு. நெடுங்காலம் எதிர்பார்த்திருந்த ஒன்று வார இறுதிக்குமுன் சித்தியாகும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

உத்தியோகஸ்தரோடு ஊடாடுவதில் அல்லது புது ஒழுங்குகள் செய்வதில் இந்தவாரம் கவனமாயிருக்கவும். பணத்துறையில் நல்ல காலம். ஆனால் எவ்வளவு வந்தாலும் அவ்வளவும் செலவாகும். வார இறுதியில் இனத்தவர்கள் சிறுதுன்பமுண்டாக்கக்கூடும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

சமூக வாழ்க்கையிற் சந்தோஷமானவாரம். ஆனால், பெண்ணின நண்பர் சில தொந்தரவுண்டாக்கக்கூடும். வியாபார விஷயங்களுக்கு மோசமான காலம். புது நண்பர்களோடு ஊடாடும்பொழுது கவனமாயிருக்கவும்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம, 1ம் பாதம்.

தேகசுகத்தைப்பற்றி இந்தவாரம் கவனமாயிருக்கவும் இரகசியப்பகைவராற் சில தொந்தரவுக்குமிடமுண்டு. புதுமுயற்சிகள் கவனமாய்க் கையாளப்படவேண்டும்.

**கன்னிராசி** உத்திரம் 2,3,4ம் பாதம அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

வாரத்தின் முன்னிரண்டுநாட்களும் சில தொந்தரவுண்டாக்கக்கூடும. பின்பு புதுத்திட்டங்களிற் சந்தோஷத்துக்குத் திருத்திக்குமிடமுண்டு. குடும்பச சந்தோஷமும் வண்டிகள்மூலம் லாபமும் வரும். வார இறுதியில் சில அதிட்டம் நினைத்தபடி வரக்கூடும்.

**துலாம்** சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

நல்ல வியாபாரத்தில் அல்லது சட்டத் தொடர்புள்ள முயற்சியில் இந்த வாரம் நம்பிக்கை மோசம் வரக்கூடும். உத்தியோகஸ்தருடன் ஊடாடுவதில் நிககள் செவ்வாய் புதனகிழமைகளிற் கவனமாயிருக்கவேண்டும். குடும்பசுகவீனம் பண நெருக்கடி யுண்டாகக்கூடும்.

**விருச்சிகராசி** விசாகம் 4-ம் பாதம அநுஷம், கேட்டை.

வீட்டிலும் வியாபாரத்திலும் முதலரைவாரம் இலகுவான காலம். ஆனல் புதன் வியாழன் வெள்ளிக்கிழமைகள் கவனமாகக் கழிக்கவும் வாரஇறுதி பின்பு நல்லகாலமாகின்றது.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம.

இந்தவாரம்பணநெருக்கடிசிறிது குறையக்கூடும். ஆனல் மனக்கோட்டைகளைத் தவிர்க்கவும் புதுத் தொடர்புகளாற் பெரும் உதவியுண்டு. நெடுங்காலத் தொந்தரவுகள் நீங்கக்கூடும், செவ்வாய் மாலையும் சனியும் கவனமாய்க் கழிக்கவும், வார இறுதி பின்பு நல்லகாலமாகின்றது.

**மகரராசி** உத்தராடம் 2,3, 4 பாதம திருவோணம அவிட்டம் 1, 2ம் பாதம்.

பணத்துறையில் நெருக்கடியான வாரம், விசேஷ கருமங்களில் ஈடுபடவேண்டாம் இரகசியப்பகைவராற் சில தொந்தரவுக்கும் அவமானத்துக்கு மிடமுண்டு.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம.

இந்தவாரம் விசேஷ திட்டங்களில் தீவிர முன்னேற்றமுண்டு ஆனல் அதிகஞ் செலவழிக்க வேண்டும். சொந்த விஷயத்திற் புதுநட்புப் பெரும் உதவியைத்தரும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

நல்விணக்கத்துடன் கைதேர்ந்த வழியைக் கடைப்பிடித்தால் அதிக லாபமுண்டு. பிற தேசத்தாரும் அறியாதவர்களும் பெருமுதவி செய்வர். புதுத் திட்டங்களுடன் முன்னேறுக.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வண்ணார்பண்ணை கிழக்கு.
1 மாணிக்கர் தம்பிராசா (மரணம்)
2. பொன்னை சிவபாக்கியம்.
(என். தம்பிராசா கைம்பெண் சிவபாக்கியம் தானாகவும் 1-ம் வழக்காளியின் ஆஸ்திக்குத் தத்துவகாரியாகவும்) வழக்காளி.
இல. 15492. எதிராக
நல்லூர்,
1. இளையதம்பி சண்முகம்
2. இளையதம்பி பொன்னுத்துரை
3. இளையதம்பி நல்லதம்பி
4. இளையதம்பி முத்து
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 15492-ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1952-ம் ஆண்டு பெப்ரவரி (மாசி) மாதம் 27-ந் திகதி (27-2-52) புதன் கிழமை பிறபகல் 4 மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:– முதல் வட்டி ரூபாய் 512-76-ம், இதில் ரூபாய் 350/= க்கு 8-5-40 திகதி தொடக்கம் 17-7-40 திகதி வரைக்கும் 100-க்கு 15 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும 100-க்கு 9 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 137-23 சதம்.

காணியின் விபரம

வடமாகாணம யாழ்ப்பாணம் டிஸ்றிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவிற்பற்று நல்லூரிலுள்ள 'சனி வளவும் சடையன் வளவும், அளகைகோன் முதலியார் வளவும் குமாரபுரி வளவும் விரலசுவி வளவம்'' கிலப்பரப்பு இரண்டு (2-ம்) வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் பனைகளும் எல்லை கிழக்கு வல்லிபுரம் சின்னப்புவின் உருமைக்காருக்குரிய ஆதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு சித்தர் கைம்பெண பாறுபதிக்கும் கணபதிப்பிள்ளை பெண் கண்மணிக்கும் மறுபேருக்கு முரிய ஆதனங்கள். தெற்கு பழனிப்பிள்ளை சின்னத்துரையின் ஆதனம், இதடங்கலும் ஆனல் குறித்த கிணற்றில் கிழக்

செல்லக் காணிக்குரிய பங்கு புறநீங்கல்.

சின்னதம்பி சங்க ப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer.
தெல்லிப்பழை
15-1-1951.
M. 192 1—2—52.

## இன்பத்தின்நிலைஇதுதானு!

2-ம் பக்கத் தொடர்ச்சி

நாடகத்திற்காக அமைக்கப்பட்டவர்களும், ஆசிரியரும் ஒருங்கமைந்து விதியின வேகம் என்ற கதையைப் படித்துக்கொண்டு அதிலுள்ள நுட்பங்களை அறிந்து முடியவில்லை ஆய்விட்டது நேரம். ஆசிரியர் கதாநாயகன் கதாநாயகிக்குரிய பாகத்தை அன்றே ஆரம்பித்துவிட வேண்டுமென்று காரியாலயத்துட் செல்லும்போது பங்கஜத்தையும் வரவழைத்தார். பகவதி தன்னை வரவழைக்காததற்கு வல்லடி வழக்கைச் சொல்லுவான்போன்று தானும் சென்றான். ... .... ... (தொடரும்)

## அறிவித்தல்

உடுப்பிட்டிக் கிராமச்சங்க எல்லைக்குள் வல்வெட்டிக் கிராமத்தில் ஓர் கிணறு வெட்டுவதற்கு 1952-ம் ஆ. மாசிமீ 9உ முற்பகல் 10 மணிவரையும் கேள்விப் பத்திரம் என்னல் ஏற்கப்படும்.

கேள்விப்பத்திரப் பிணைப்பணம் ரூபா இருபத்தைந்து சங்கக் கந்தோரில் கட்டியதன் பேரால் கேள்விப் பத்திரம் என்னற் கொடுக்கப்படும்.

தேவையான விஷயங்களை உடுப்பிட்டிக் கிராமச் சங்கக் கந்தோரில் வந்து அறியவும்.

யாழ்ப்பாண ஸ்தலஸ்தாபனக் கந்தோரில் பதியப்பட்ட காமாவனிகளுக்கு மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இ. தா. சிவகுருநாதன்
உ. கி. ச. தலைவர்.
உடுப்பிட்டி
30-1-52.
M 191 1—2—52.

---

# 'மடவார் மனம்' என்பது என்னை!

## பெண்ணிற் பிரியாப் பேதமை

### உலகியலில் உணரப்படும் உண்மை

பண்டித புலவர்,
: த. வடிவேலு :

உலகியலில் மகளிரியல்பு கூறிச் செல்வது புலவர் மரபாயிற்று வள்ளுவனும் நம் தமிழகத்திற்கும் – உலகினுக்குமே பெரும் புலவனுகின்றான். அவனது நுட்ப மதியும் திட்பமாக உலகியலை ஆராய்ந்து அறவுரை பகர்வதிலேயே முனைந்திருக்கின்றது. மகளிர் அடிமைகளல்லர், ஆடவர் சிறப்பிற்கும் தாழ்விற்கும் அவர்களே காரணமாவர் என்று பெருமையுடன் பேசுபவனும் வள்ளுவனே. பெருமையுடைய பெண்ணினத்தார் பேதமையியல்புடையவர்கள் – ஒருநிலையற்ற உள்ள முடையவர்கள் என்று எமக்கியம்புபவனும் வள்ளுவனே. கூடா நட்பின திறமியம்ப வந்த வள்ளுவன் நமக்கு இனம்போன்று வெளியில் காட்டிப் பகைவராக இருக்கின்றவர்களுடைய நட்பு தக்க சமயத்தில் பகைமையாக மாறுபட்டுவிடுமெனக் காட்டுவான் மகளிர் மனத்தையே தக்க உவமையெனக் கொண்டார். அதனல் அவர் பெண்களை இழிவுடையவரெனக் கூறத் தலைப்படவில்லை. சமயத்திற்குத் தகுந்தபடி மனம் வேறுபடும் இயல்பாகிய ஒரு இழிவு அவர்களுடன் கூடவே அமைந்துள்ளது என்ற உலகியலையே காட்டினர்.

"இனம் போன்றி னல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்"

என்ற பாவை நோக்குவார்க்கு இது புலனுகும்.

இக் குறளைத் தமது நூலில் எடுத்தாண்ட வள்ளுவரும் மகளிரும் என்ற நூலின் ஆசிரியர் அதனை எடுத்து விளக்கி மறுக்கு மாற்றமின்றி விட்டுச் சென்று வேறு சில காட்டுக்களை வைத்துக்கொண்டு பெண் பெருமையுடையவள் எனச் சாதிப்பதால் பெண்ணினத்திற்கோ தமக்கோ பெருமை தேடிக்கொண்டவராக முடியாது. இனம்போல இனமல்லாதவர்களுடைய தொடர்பு மகளிர் மனம் வேறுபடுவது போலச் சமயத்தில் வேறுபடுமெனபதே இக் குறளின் பொருளாகும். சொற் போக்கில வெள்ளிடையாக அமைந்த குறளின் பொருளை மாற்றியமைப்பதானல் குறளை வேறுபடுத்தே பொருள் வேறு கொள்ளல் வேண்டும். பெண்களிடத்து இயல்பாக அமைந்துள்ள மனவேறுபாட்டை உள்ளபடி கூறிப்போன வள்ளுவனே பெண்ணுக்குப் பெருமை தந்தான் என வேறு குறளைக் காட்டிப் பேசத்தலைப்படுவோர் பெண்கள் மனநிலையறியாதோரேயாவர்.

வள்ளுவன் மாத்திரமா எவ்வரலாற்றை நோக்கினும் – எப்புலவன் வாக்கை நோக்கினும பெண் பேதமையுடையவளே என்பதைத்தான் நாம காணமுடியும்.

### பேதையரால் பேரிடர்!

உண்மையாக நடந்த வரலாற்றைக் கூறிப்போகும் இராமாயணம் கூறுவதென்ன பெண்ணின் பேதமையால் ஏற்பட்ட இடரன்றி வேறு(க)முடி... மகன் பரதனைவிட இராமனிடத்து மிக்க அன்புபாராட்டிய கைகேயி ஒரு சில உரைகளைக் கேட்டதும் பல ஆண்டுகளாக இராமன் மேற்கொண்ட பாசத்தை மறக்கின்றாள். மந்தரையின் வஞ்சமொழி சிலவற்றைக் கேட்டதும் அவளுள்ளம் கறங்குபோலச் சுழற்சியடைகின்றது. அரச முறையினை மறக்கின்றாள். பெற்ற தாயைவிடத் தன்மீது பெரிதும் அன்புபாராட்டிய சிறுவன் – இராமன் – வனத்தில் பேரிடருறுவான் என்பதனை மறக்கின்றாள். முறை குன்றிய நாடு கேடுறுமென்பதனை மறக்கின்றாள். "அரச உன் விருப்பப்படி பரதனதாகும் இராமன் காடேகுவதை என்னுள்ளம் ஆற்றாது. இராமன் காடேகின் என்னுயிரேகும் என்னுயிர்போன்ற – என் கண் மணி போன்ற இராமன் காடேக வேண்டுமென்ற வரத்தை மாத்திரம் தவிர்" என்று இரந்த மன்னன் வேண்டுகோளை மறக்கின்றாள். அவளது பேதமை உளம் பெருமை எது என்பதை அறிந்துகொள்ளும் பெற்றியில்லை. அவளது மனவேறுபாட்டன்பகலா மன்னனைக் கொன்றொழிக்கின்றது. இராமனைக் காடேகச் செய்கின்றது. மாசற்ற பரதனையே மாசுபடுத்துகின்றது அயோத்தியையே அல்லற்படுத்துகிறது. அருமை மகன் பரதனையே ஆற்றொணாத் துயரத்திலாழ்த்துகிறது. அவனது அளவிடமுடியாத துயரமேலேயே "பேயீரே நீர்" என்று பெற்ற தாயின் பேதமை மனத்தைப் பெரியோர் முன்னாட்டிப்பேசும்படி செய்துவிடுகின்றது

தேவரும் சிவகன் திரை மீட்கும் சரிதை கூறுங்கால் வேடர்கள் அனைவரும் சிவகன் கணைக்கு எதிர் நிற்க முடியாது மாய்ந்தனர் என்று கூறப்போந்தவர் அதற்குத் தகுந்த உவமையாக மடவார் மனமொழிக்கும் ... (தொடர்ச்சி 4-ம் பக்கம்)

---

எதிர்பாருங்கள்!

இசை அரசு
M. M. தண்டபாணிதேசிகர்
அவர்களின்
இன்னிசைக்கச்சேரி
விருந்து

சைவபரிபாலன சபை
நாவலர் ஆச்சிரம நிதிக்காக

---

தமிழ்ப்புலவர் சரித்திரம்

சுன்னுகம்
அ. குமாரசாமிப்புலவர் இயற்றியது
( இரண்டாம் பதிப்பு )

பல புதிய புலவர்களின் சரித்திரங்கள் அடங்கியது

விலை ரூபா 5-00

புலவரகம் மயிலணி
சுன்னுகம் P. O.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மடவார் மனம் என்பது என்னே?

3-ம் பக்கத் தொடர்ச்சி

### மாறு கொள்ளும் மகளிர் மனம்!

"மடவார் மனம்போல மாய்த்தார்" பகைவர் சிவகன் கணைகளுக்கு எதிர் நிற்க முடியாது அழிந்தொழிந்தனர் என்று கூறியவர் மடவார் மனம் எப்படி வேறுபடுமோ அவ்விதமே இவர்களும் விரைவில் வீரம் மாய்த்து வினை வழி மாண்டனர் என்கின்றார்.

கொங்குவேளிரும் பெருங்கதை முப்பத்தைந்தாங் காதையிலே கண்டோர் கூற்றாக அமைத்த பகுதியில்

"மாரியும் திருவும்
மகளிர் மனமும்
தக்குழி நில்லாது
பட்டுழிப் படுமெனும்
கட்டுரை யன்றியும்
கண்டனம் யாம்"

மாரியும் திருவும் மகளிருள்ளமும் ஒருவழியில் நில்லாது வேறுபடுமியல்புடையதெனப் பிறர்கூறுவர். காமதனை யீண்டு இம் மகளது வினையால் செயலளவிற் கண்டு கொண்டோம் என்கின்றார்.

சேக்கிழார் அடிகள் என்ன சொல்லுகின்றார். மாலைக் காலம் வந்தது. வான் இருண்டது என்று கூறவந்த அவர் அவ்விருட்டினைக் காட்டப் பல உவமைகளை எடுத்துக்கொள்ளுகின்றார்.

பஞ்சின் மெல்லடிப்
பாவைய ருள்ளமும்
வஞ்ச மாக்கடம்
வல்வினையும் மா
னஞ் செழுத்து
ணரா வறிவிலோர்
நெஞ்ச மென்ன
விருண்டது நீண்டவான்.

என்கிறார்.

வஞ்ச மாக்களின் வல்வினையையும் ஐந்தெழுத்துணரா அறிவிலோர் நெஞ்சினையும் உவமைகளாகக் காட்டியவர் அதனுடன் நின்றுவிடவில்லை. செய்யுளின் தொடக்கத்திலேயே பஞ்சின் மெல்லடிப் பாவைய ருள்ளமும் என்ன இருண்டது நீண்டவான் என வானின் இருளை மகளிரின் பேதமை உள்ளத்தால் தெளிவுபடுத்துகின்றார். நீண்ட வானை யடைந்த இருள் உலகிலுள்ள பொருள்களைவறையும் ஒளியின் உதவி யின்றிக் காணமுடியாது தடுத்துவிடுகின்றது. அதேபோன்று மகளி ருள்ளமும் பேதமையால், உணர்த்துவோரின்றி உண்மையை அறியும் ஆற்றலில்லா அறியாமை சிம்பிய தென்பதே அவர் துணிபாகும்.

பெண்களெல்லோரும் ஓரே தகுதி யுடையவ ரல்லர் நுட்ப அறிவு படைத்தோர் — நூலொடு பழகினோர் - என்றிவர்கள் பெருமையுடையவர் என்று கூறும் பேதையோரு மூவாராதலைக்கண்டுபோலும் அதனை மறப்பான்

### ஔவையார் கூற்று

"நுண்ணறி வுடையோர்
நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பது
பெரும் பேதமைத்தே"

எனக் கூறிப்போந்தனர் ஔவையாரும் பெண்ணின் பேதமை உணர்ந்தே

"நாடா கொன்றோ
காடா கொன்றோ
அவலா கொன்றோ
மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

எனக் கூறி இவ்வுலகு ஆடவர் செயலால் உயர்வடைதலன்றி பேதமைக்குணம்படைத்த மகளிரால் உய்வதென்பது ஒருபொழுதுமின்றும். "பேதமையென்பது மாதர்க்கணிகலன்" எனவும் பெண்தன்மையை வேறுபடுத்து விளக்கிப் போந்தார்,

கற்பரசியாக கண்ணகியும் பேதமை உள்ளத்தைப் பேதுறுத்து வெல்ல முடியாத நிலையிலேயே

"இன்னா செய்தாரை
யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்ற அறவுரையையும் மறந்து கணவனிறந்தான் என்ற தல் துயரேற்றுவான் மதுரை நகரினைவரையுமே தீக்கிரையாக்குகிறாள். பேதமை நிலை பேரிடர் செய்யாவிடின் அரசன் செய்த தவறுக்காக அறியா மக்களனைவரையுமே அழித்தொழிக்க முற்பட்டிருக்க மாட்டாள். பேதமை அவள் பேரறிவைக் கெடுத்து விடுகின்றது. பெண்ணிற்குப் பேதமையுண்டு என்ற ஒன்றினாலேயே அவள் பெருந்தகைப் பெண்டு என்ற பெருமதிப்புக்குள்ளாகின்றாள்.

மகளிர் எத்தகைய கல்வியுடையராயினும், எத்தகைய பெரும் பதவி பெற்றோராயினும் பேதமை வழிப்பட்டுப் பேதுறு மனமுடையராதல் உலகியல்பாம் என்பதனை உணரலாம். உலகியலே இதனை நம்முன் உறுதிப்படுத்துகிறது.

உலகியலுயர்வுக்கு உறுதுணையாய்ப் பெண்களைத் தந்து அவர்களுடன் பேதமையையும் பிரியாப் பண்பாகப் பொறுத் தந்த இயற்கையை உணர்ந்து பெரும்பீடுடை ஆடவர் பெண்ணின் பேதமை வழிநிலலாது பெண் [illegible] பெருமைப்படுத்துவார் [illegible]

உழைப்பதற்கு வழி!

மாதம் ரூபா 100 தொடக்கம் 300 வரையில் மூலதனமின்றி ஓய்வு நேரங்களில் உழைக்க ஒரு வழியுண்டு. இதுபற்றிய விபரங்களை இவ்விலாசத்திற் கெழுதி அறிக. விபரங்கள் இலவசம்.

**Girson Knitting Works**
**Ludhiana 9**

### கலியுக வரதா வருக! கருணைக் குமரா வருக

1—ம் பக்கத் தொடர்ச்சி

நெறித்த விம்மி
முறுடு முலைப்பால்
இனி துட்டேன்'
முகம் பார்த்து (இ)ருந்து
மொழி பகரேன்;
முருகா! வருக! சிவ சமய
முதல்வா! வருக!
திரை கொழித்து
மருகு மலைவாய்க்
கரை சேர்த்த
மழலைச் சிறவா வருகவே
வளரும் கழபக்
குரும்பை முலை
வள்ளி கணவா வருகவே"

### தமிழ் மொழியிற் சங்கக் கூட்டம்

சங்கக் கூட்டங்கள் தமிழ்மொழியில் நடத்த வேண்டுமென்றும் இவ்வாறு நடத்துதல் படிப்படியாயே வரவேண்டுமென்றும் மட்டக்களப்புப் பட்டின சங்கம் தீர்மானித்திருக்கின்றது.

### சித்த - ஆயுள் வேத வைத்திய சங்க வேண்டுகோள்

சுகாதார மந்திரியாகக் கடமையாற்றுகின்ற பிரதம மந்திரி திரு D. S சேனநாயக அவர்கள் முன்னிலையில், அகில இலங்கைச் சித்த - ஆயுள்வேத வைத்தியசங்கத்தார்,26-1-52ல் கீழேசாணுந் தங்கள் தேவைகள் எழுதப்பெற்றவிண்ணப்பப் பத்திரம ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

#### தேவைகள்

1. ஆயுள்வேதசபை அமைப்பு.
2. ஆராய்ச்சி நிலையம், நூல் நிலையம் ஆயுள்வேத வைத்திய சாலைகள் அமைத்தல்
3. மூலிகைத் தோட்டம் அமைத்தல்.
4. மருந்துகள் ஆக்க நிலையம் அமைத்தல்.
5. சாதாரண விலையில் அபின் கஞ்சா வைத்தியருக்கு வழங்கல்.
6. இந்தியாவுக்குப் போய் மருந்து ஆக்க முறைகள் பழகுவதற்கு அரசாங்கம் உதவி செய்தல்.
7. கிராமங்களில் ஆயுள்வேத வைத்தியசாலை அமைத்தலும் மாணவருக்குப் பண உதவியும்,
8. இலங்கைச் சித்த - ஆயுள் வேத (யாழ்ப்பாணம்) வைத்திய கல்லூரிக்குப் பண உதவி செய்தல்.
9. ஔடத தத்துவ அறிஞர் சபையைப் பருப்பித்தல்.

திறமான **தேக்க மரங்கள்** பல தினிசுகளிலும்

திறமான **ரூணிமார்க்ஓடுகள்** 13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

Std. 2

### தமிழ் எழுத்தாளர் சங்கம்

அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆரம்பக்கூட்டம் சென்ற சனிக்கிழமை மாலை5மணிக்கு தொடக்கம் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்றது. திரு. க. இராமச்சந்திரன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார் சங்க உத்தியோகஸ்தர்கள்பின் வருமாறு தெரியப்பட்டனர்.

தலைவர் திரு. கே. ராமச்சந்திரன், உபதலைவர்கள் திருவாளர்கள்: வி. கே. பி. நாதன், கே. பி. ஹரன், கே. வி. செல்லத்துரை, கே. இராமநாதன், எஸ் எம். கமால்தீன், காரியதரிசி அ. ந. கந்தசாமி, உபகாரியதரிசிபண்டிதர் எம். ஆறுமுகம், தனாதிகாரி எம். எச். எம். இபுறுகிம், பன்னிருவர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் சபையோரால் தெரிவு செய்யப்பட்டது.

பண்டிதர் கா. பொ. இரத்தினம், பண்டிதர் வி. கே. பி. நாதன், திரு. சோ. சிவபாதசுந்தரம், வித்துவான் எப். [illegible]
[… கூட்டத்தில் பேசினார்கள்.]

## சாலாமிஸ்ரி லேகியம்

இதனால் மூலர்குடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, செஞ்செரிவு, கை கால வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் குரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். தேகபுஷ்டி, வஜீரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிசயமாய்க் காணுதலால் வேறும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருருத்தல் விலை ரூபாய் 25-00, அரைருத்தல் விலை ரூபாய் 12-50, கால்ருத்தல் விலை ரூபாய் 6-75

வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.

வி. பி. பி: மூலமும் மருந்துகள அனுப்பப்படும்.

### சிவஞான பற்பொடி.

சிவஞான பற்பொடியினல் காலை பல் விளக்கி வந்தால், வாய் நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல் பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

டொட்டணம் 1-க்கு விலை சதம் 25

**K. ஆறுமுகம்பிள்ளை**

எமது விலாசம் நி. 3/1 தட்டாதெரு
M 196 1-2-30-4-52. கோட்டைமுனை, மட்டக்களப்பு.

இலங்கையின் மிகப்பெரிய

— நகை —

வியாபாரிகள்

= O =

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

ஸ்தாபனம்:

63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்

எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இரகசியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
நிருப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Friday, February 1, 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org